**<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.</u>**

**<u>EA.No.2/2023 in EP.11/2020 in R.C.O.P.4/2007</u>**

**<u>நாள்.11.03.2026</u>**

**<u>எ.ம.சா. 1</u>- கருப்பாயி**

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனது அப்பா பெயர் என்ன என்றால் குருசாமி. என் அப்பா உயிருடன் இருக்கும்போது பிரதான R.C.O.P.4/2007 மனுவை தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். என் உடன்பிறந்தவர்கள் யார் என்றால் ஈஸ்வரி, சக்கம்மாள், வெயிலு கந்தம்மாள். என் அப்பா பிரதான R.C.O.P.4/2007 மனுவை எதற்காக தாக்கல் செய்திருந்தார் என்றால் நாங்கள் வாடகைக்கு வைத்திருந்த நபர் காலிசெய்து கொடுக்காததால் தாக்கல் செய்தார். நாங்கள் வாடகைக்கு வைத்திருந்த நபர் பெயர் என்ன என்றால் அந்தோணிராஜ். மேற்படி அந்தோணிராஜ் எங்கிருக்கிறார், எந்த ஊரில் இருக்கிறார் என்றால் தெரியாது. பிரதான R.C.O.P.4/2007 மனுவில் கண்ட சொத்தில் தற்போது அந்தோணிராஜ் குடியிருக்கவில்லை என்றால் சரிதான். தற்போது நான் தான் பிரதான R.C.O.P.4/2007 மனுவில் கண்ட சொத்தில் தற்போது மின் இணைப்பு வாங்கி தற்சமயம் நான் தான் குடியிருக்கிறேன் என்றால் சரிதான். தற்போது நான் தான் பிரதான R.C.O.P.4/2007 மனுவில் கண்ட சொத்தில் குடியிருப்பதால் அந்தோணிராஜை காலிசெய்ய சொல்லி தாக்கல் செய்த E.P.No.11/2020 மனுவானது தேவையற்றது என்றால் சரிதான். என் அப்பா தாக்கல் செய்த பிரதான R.C.O.P.4/2007 மனுவில் கண்ட சொத்தின் கதவு எண் என்ன என்றால் பழைய கதவு எண் 52, புதிய கதவு எண்.61. பாலமுருகன் என்பவர் தாக்கல் செய்த EA.No.2/2023 மனு பற்றிய விபரம் தெரியுமா என்றால் எங்கள் சொத்தை அவருடைய சொத்து என மனு போட்டுள்ளார். பாலமுருகன் என்பவர் தாக்கல் செய்த EA.No.2/2023 மனுவில் கதவு எண் என்ன என்றால் கதவு எண்.61. நான் தற்போது குடியிருக்கும் R.C.O.P.4/2007 மனுவில் கண்ட சொத்தினுடைய வீட்டிற்கு கீழ்பக்கம் ரத்தினம்மாள் என்பவர் குடியிருக்கிறார் என்றால் சரிதான். மேற்படி ரத்தினம்மாள் குடியிருக்கும் வீட்டின் கதவு எண் என்ன என்றால் போலியான கதவு எண் வைத்துள்ளார். நான் தற்போது குடியிருக்கும் R.C.O.P.4/2007 மனுவில் கண்ட சொத்தினுடைய வீட்டிற்கு மின் இணைப்பு எப்போது பெற்றேன் என்றால் ஒரு வருடம் இருக்கும். நான் தற்போது குடியிருக்கும் R.C.O.P.4/2007 மனுவில் கண்ட சொத்தினுடைய வீட்டின் மின் இணைப்பு எண் என்ன என்றால் எனக்கு படிப்பறிவு இல்லை அதனால் தெரியாது.

R.C.O.P.4/2007 மனுவில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு தகதா மனுதாரருக்கும் அவருடைய முன் பாத்தியஸ்தர்களுக்கும் எதிரானது கிடையாது என்றால் சரியல்ல. R.C.O.P.4/2007 மனு தாக்கல் செய்வதற்கு முன்பே 2001ம் வருடவாக்கிலேயே பழைய கதவு எண்.52A க்கு, புதிய கதவு எண்.61/1 என சுப்புலட்சுமி என்பவர் பெயரில் சொத்து வரி ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் தவறாக பழைய கதவு எண்.52 க்கு புதிய கதவு எண்.61 என R.C.O.P.4/2007 மனுவில் தீர்ப்பு பெற்றுக்கொண்டு, தகதா மனுதாரர் பாலமுருகனுக்கு பாத்தியப்பட்ட சொத்தினை நீதிமன்றம் மூலமாக சுவாதீனம் பெற்றுவிட முயற்சித்ததால் EA.No.2/2023 தகதா மனுதாரர் பாலமுருகனால் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. EA.No.2/2023 ல் கண்ட சொத்தானது ஆதியில் சுப்புலட்சுமி என்பவருக்குப் 20.01.2001 தேதியிட்ட கிரைய ஆவணம் மூலமாக பாத்தியப்பட்டது என்றும், அந்த இடத்தில் ரூ.2 லட்சம் செலவு செய்து சுப்புலட்சுமி வீடு கட்டி, தனது பெயரில் சொத்து வரி விதிப்பு ஏற்படுத்தி வரி செலுத்தி அனுபவம் செய்து வந்தார் என்றால் சரியல்ல. அதன்பிறகு சுப்புலட்சுமி என்பவர் தனது கணவரான சண்முகையாவிற்கு 06.06.2012 தேதிய ஏற்பாடு ஆவணம் மூலமாக பாத்தியப்படுத்திக்கொடுத்து, அனுபவத்தை ஒப்படைத்து விட்டார் என்றால் சரியல்ல. அதன்பிறகு மேற்படி சண்முகையா, EA.No.2/2023 மனுதாரர் பாலமுருகனுக்கு 29.06.2016 தேதிய ஏற்பாடு ஆவணம் மூலமாக பாத்தியப்படுத்திக்கொடுத்து, அனுபவத்தை ஒப்படைத்து விட்டார் என்றால் சரியல்ல. EA.No.2/2023 மனுவில் கண்ட சொத்தை மனுதாரர் பாலமுருகன், ரத்தினம் என்பவருக்கு வாடகைக்கு கொடுத்து, மேற்படி ரத்தினம் தான் EA.No.2/2023 மனுவில் கண்ட சொத்தில் வாடகைக்கு இருந்து வருகிறார் என்றால் சரியல்ல. EA.No.2/2023 மனுவில் கண்ட சொத்தில் எனக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. EA.No.2/2023 மனுவில் கண்ட பரிகாரங்கள் மனுதாரருக்கு கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல.

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.</u>**

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.03.11 17:05:42 +0530